**DEPOSITION OF WITNESS**
**BEFORE THE ADDITIONAL MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL**
**AT PUDUCHERRY**

**MCOP No. 251 of 2024**
**PW – 1**

Name of the witness : Vignesh

Father's name : Govindan

Solemnly affirmed in accordance with the provisions of Indian Oaths Act X of 1873 and Oaths Act 44 of 1969 on this the 03rd day of March 2026.

**2–ம் எதிர்மனுதாரர்தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது HDFC தனியார் வங்கியில் பணிபுரிகிறேன். மாதம் ரூபாய் 55 ஆயிரம் சம்பளமாக பெறுகிறேன். சென்ற வருடம் ஆகஸ்டு மாதத்தில் மேற்படி வங்கியில் பணியில் சேர்ந்தேன். ம.த.சா.ஆ.15 மற்றும் 16 வழக்கிற்காக நானே தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மீது மோதியதாக சொல்லும் வாகனம் எனக்கு எதிரில் வந்தது. அந்த வாகனம் வருவதை பார்த்தேனா என்றால் இல்லை. சாலை அங்கு இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது.

பாலாஜி திரையரங்கில் இருந்து நெல்லித்தோப்பு சிக்னல் நோக்கி சென்றேன். பாலாஜி திரையரங்கம் அருகில் இருந்து நெல்லிதோப்பில் உள்ள என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். போலிசில் நான் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். எனக்கு எதிரே வந்தவாகனம் கிழக்கு பக்கம் திரும்பியதாக முதல் தகவல் அறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அவர் சாலையை கடந்துவிட்டாரா என்றால் சாலையை கடக்க முயற்சித்தார். அந்த வாகனம் எனக்கு எதிர்திசையில் ஒரு வழிப்பாதையில் வந்தது. அவர் திரும்பியதாக சொல்லும் திசையில் சாலை உள்ளதா என்றால் உள்ளது. நான்தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றேன்.

முதன்முதலில் அரசு பொது மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் விபத்தில் காயமடைந்ததாக கூறினேன். விபத்து நடந்த சமயத்தில் நான் வாகனம் ஓட்டும் நிலையில் இல்லாத காரணத்தினால் தான் என்ன நடந்தது என்றே எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. நான்தான் ஏதோ ஒரு வாகனத்தில் மோதிவிபத்து ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. நெல்லிதோப்பு சிக்னலில் இருந்து கிழக்கு பக்கமாக திரும்ப வேண்டிய வாகனம் அந்த வாகனத்திற்கு வலதுபுறமாக திரும்ப வேண்டுமா என்றால் ஆம். ஒரு வழிப்பாதையில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனம் வந்திருந்தால் சாலையை கடக் வேண்டிய அவசியமே இல்லை என்றால் சரியல்ல.

முதலில் அரசு மருத்துவமனையிலும் பின்னர் எலும்பு சிகிச்சை நிபுணர் கிருஷ்ணகுமார் என்பவரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அரசு மருத்துவமனையிலிருந்து நானாக டிஸ்சார்ஜ் பெற்று சென்றுவிட்டேன் என்றால் சரிதான். மருத்துவர் கிருஷ்ணகுமார் என்பவரிடம் சிகிச்சை பெற்ற ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் மீண்டும் அரசு பொதுமருத்துவமனைக்கு செல்லவில்லையா என்றால் ஆம் செல்லவில்லை.

என்னை இடித்ததாகச் சொல்லும் வாகனத்தின் ஓட்டுநர் பெயர் முகமது ஷாகீர். என்னிடம் காட்டப்படும் ம.த.சா.ஆ.4ன் அசல் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எவ்வாறு அந்த ஆவணம் எனக்கு கிடைத்தது என்றால் புகார்கொடுத்த போது அவர் காவல் நிலையத்திற்கு வந்திருந்தார். அங்கு மேற்படி ஆவணத்தை கொடுத்தார். ம.த.சா.ஆ.12ல் எனக்கு சாதாரண காயம் ஏற்பட்டதாக கண்டுள்ளது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் எனக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டதா என்றால் எடுத்தார்கள்.

ம.த.ச.ஆ.10 ல் மருத்துவரை நான் 16.10.2023 அன்று முதலில் பார்த்ததாக உள்ளது. நான் 12.10.2023 அன்றே அரசு மருத்துவமனயிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகிவிட்டேன்என்றால் சரிதான். ம.த.சா.ஆ.11 ல் எலும்பு முறிவிற்கு கேள்வி

குறிதான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தின் காரணமாக எனக்க எலும்பு முறிவு ஏற்பட்டதாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்தினால் எனக்கு உடல் ரீதியான பாதிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல.

முதல் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும் அதனால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்லஎன்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** – இல்லை

**Take down by me in the open court and interpreted to the deponent and acknowledge by him / her to be correct.**

**Presiding Officer**
**Additional Motor Accident Claims Tribunal,**
**Puducherry**